பாடம் 2

# மறக்கமுடியாத இரவு

***பிறந்தநாள் விழா மிகவும் ஜாலியாக இருக்குமல்லவா? உனது பிறந்தநாளை நீ எப்படிக் கொண்டாடினாய்? நம் தேசத்தின் சுதந்தரதினமும் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறதல்லவா? இந்த விழாக்கள் எல்லாம் நமக்கு ஒரு முக்கியமான காரியத்தை நினைவூட்டுகின்றது.***

எகிப்தின் ஒரு பகுதியான கோசேன் நாட்டில் இஸ்ரவேல் மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களிடத்திற்கு மோசே வேகமாகச் சென்று கொண்டிருந்தார்.

பார்வோன் கூறிய வார்த்தைகள் மோசேயின் காதில் இன்னும் தொனித்துக்கொண்டிருந்தன. ‘‘என்னை விட்டு அப்பாலே போ; நீ இனி என் முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு; நீ இனி என் முகத்தைக் காணும் நாளில் சாவாய்’ என்றான். இஸ்ரவேலரை தேவன் விடுவிக்கும் நேரம் வந்துவிட்டதாக மோசே உணர்ந்தார். தேவன் தன்னை முட்செடியில் சந்தித்ததிலிருந்து இதுவரையிலும் தேவன் நடத்திய அதிசயங்களையும் அற்புதங்களையும் மோசே ஒவ்வொன்றாக எண்ணிப்பார்த்தார்.

‘இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அனுப்பிவிட்டால், தன் நாட்டின் முன்னேற்றத்திற்கு வேலைசெய்ய அடிமைகள் இல்லாமல் போய்விடுவார்களே’ என்று பார்வோன் நினைத்தான். தண்ணீர் யாவும் இரத்தமானதும், தவளைகள், பேன்கள், வண்டுகள், கொள்ளைநோய், கொடிய கொப்புளங்கள், கல்மழை, வெட்டுக்கிளிகள், காரிருள் என ஒன்பது வாதைகளைக் கண்டும் பார்வோன் சற்றும் உணர்வடையவில்லை. தேவனுடைய வல்லமையான செயல்களைக் கண்டு சிறிதும் மனம்மாறாத பார்வோனை எண்ணி மோசே



**மனன வசனம்**

**கர்த்தருடைய செயல்களை**

**நினைவுகூருவேன்.**

**சங்கீதம் 77:11.**

வருந்தினார்.

மோசே, இஸ்ரவேலரை அவசரமாக ஒன்று கூட்டினார். அவர்களிடம், "இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், அவரவர் வீட்டுக்கு ஓர் ஆட்டுக்குட்டி யைத் தேர்வு செய்யவேண்டும்.

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஒரு வயது உள்ள தாகவும் இருக்கவேண்டும். அதைப் பதினான்காம் தேதி யன்று மாலையில் கொல்ல வேண்டும். இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து வீட்டு வாசல் நிலைக்கால்களில் பூச வேண்டும்.

அன்று இரவு அந்த



ஆட்டுக்குட்டியை நெருப்பில் சுடவேண்டும்; புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும். அவற்றில் மீதி யாயிருப்பதை நெருப்பில் சுட்டெரிக்கவேண்டும்.

அதைப் புசிக்கும்போது அரைகளில் கச்சை கட்டிக் கொண்டும் கால்களில் பாதரட்சையை அணிந்திருந்த படியும் கையிலே தடியைப் பிடித்துக்கொண்டும் வேகமாகப் புசிக்கவேண்டும். அது கர்த்தருடைய பஸ்கா. இதுவே எகிப்தில் நீங்கள் சாப்பிடும் கடைசி உணவு.

அந்த ராத்திரியிலே தேவன் எகிப்துதேசம் முழுவதும் கடந்துவருவார். இரத்தத்தால் அடையாளம் போடப்பட் டுள்ள வீடுகளில் சாவு உண்டாகாது. மற்ற வீடுகளி லுள்ள தலைப்பிள்ளை யாவும் சாகும்" என்று தேவன் சொன்ன தைச் சொன்னார்.

மேலும் மோசே, "நீங்கள் எகிப்தியரிடம் வெள்ளி, நகைகள், பொருட்கள் பாத்திரங்களையும் கேளுங்கள். அவர்கள் கொடுக்கும்படி

# செய்தி

**தேவனுக்கு நன்றிசெலுத்தி கொண்டாடும்போது, அவர் செய்தவற்றை நினைவுகூருகிறோம்.**

தேவன் அருளுவார்.

ஈசோப்புக் கொழுந்து களின் கொத்தை எடுத்து, கிண்ணத்தில் இருக்கும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தோய்க்க வேண்டும். பின், வீட்டு வாசல் நிலைகளில் அடையாளம் இடுங்கள். தேவனது வார்த்தைக்குக் கீழ்ப் படிந்து இரத்தத்தால் அடை யாளமிடும் வீடுகளிலே சாவு உண்டாகாது.

நடுராத்திரியிலே பார்வோ னின் தலைப்பிள்ளை முதல் மிருகங்களுடைய தலையீற்று வரையிலும் சாகும். நான் முன்னே கூறியதுபோல் உண வைப் புசிக்கவேண்டும். எகிப் தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் நம்மை விடுவிக்கப் போகிறார். இஸ்ரவேலர் தங் கள் தலைமுறைதோறும் கர்த்த ருக்கு முக்கியமாய் ஆசரிக்க வேண்டியபஸ்காஇது''என்றார்.

என் செல்லமே, பாவ அடிமைத்தனத்திலிருந்து இயேசு நம் அனைவரையும் மீட்டிருக்கிறார்.

***செய்முறை:*** **எகிப்தைவிட்டு இஸ்ரவேலர் வெளியேறும்போது அவர்கள் எவ்விதமாக உணவருந்தினார்கள் என்பதைக் காட்ட கீழ்க்காணும் படத்தில் வட்டமிடு. பின்னர் அவற்றில் முறையாக எண்களைக் குறிப்பிடு.**

**புதிர் ௨**

